www.Padasalai.Net www.TrbTnpsc.com

# அரசினர் மேல்நிலைப் பள்ளி, வீடூர் 605652

வகுப்பு: 10 சமூக அறிவியல்

தலைப்பு வினாக்கள் - வரலாறு

1. ஏகாதிபத்தியம் உருவாவதற்கான காரணங்கள்

அ) பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் நாகரீகமானதாகக் கருதப்பட்டது எது?
**ஏகாதிபத்தியம்**

ஆ) வெள்ளையர்களின் சுமை என ஐரோப்பியர்களால் கருதப்பட்டது யாது?
**கருப்பின ஆப்பிரிக்க, ஆசிய மக்களுக்கு நாகரிகம் கற்றுத்தருவது**

இ) ஐரோப்பிய நாடுகள் குடியேற்ற நாடுகளை ஏற்படுத்த முனைந்தது ஏன்?
**ஐரோப்பிய நாடுகள் வல்லமைச் சமநிலை ஆதிக்கம் பெற குடியேற்ற நாடுகளை ஏற்படுத்த முனைந்தது**

ஈ) ஏகாதிபத்தியக் கொள்கையை ஊக்குவித்தது எது?
**புதிய கடல் வழித்தடங்கள்**

2. பிளாசி மற்றும் பக்சார் போர்

அ) 1757 ஆம் ஆண்டு வங்காள நவாபாக இருந்தவர் யார்?
**சிராஜ் உத் தௌலா**

ஆ) துணைப் படைத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியவர் யார்?
**வெல்லெஸ்லி பிரபு**

இ) டல்ஹௌசி பிரபுவின் கொள்கை யாது?
**வாரிசு இழப்புக் கொள்கை**

ஈ) விக்டோரியா மகாராணியின் பிரகடனம் எப்பொழுது வெளியிடப்பட்டது?
**கி.பி.1858 ஆம் ஆண்டு**

3. சீனாவில் ஏகாதிபத்தியம்

அ) மக்கோவா மற்றும் காண்டன் நகரங்களுக்கு வியாபாரத் தடை ஏன் விதிக்கப்பட்டது?
**ஐரோப்பிய வணிகர்கள் சீன கலாச்சாரத்தை ஏற்க மறுத்ததால்**

ஆ) சீனா எந்தெந்த பொருட்களை இங்கிலாந்திற்கு விற்பனை செய்தது?
**தேயிலை மற்றும் காப்பி பொருள்களை**

இ) சீன அரசியின் பெயர் என்ன? அவர் எவ்வாறு அழைக்கப்பட்டார்?
**தவோகர், அவர் பழைய புத்தர் என அழைக்கப்பட்டார்**

ஈ) திறந்தவெளிக் கொள்கையை உருவாக்கியவர் யாவர்?
**அமெரிக்காவும், இங்கிலாந்தும்**

4. பாக்சர் புரட்சி

அ) சீனா – ஜப்பானியப் போரின் விளைவு யாது?
**சீனா படுதோல்வி அடைந்தது**

ஆ) சீனா ஜப்பானிற்கு அளித்த தீவு யாது?
**ஃபார்மோசா தீவு**

இ) பக்சார் கலகத்திற்கான காரணம் யாது?
**சீன அரசின் மீது கோபம் கொண்ட இளைஞர்களை சீனப் பேரரசி தவோகர் வெளிநாட்டவர் மீது திசை திரும்பியது.**

ஈ) பக்சார்கள் என்ன செய்தார்கள்?
**1899ல் ஐரோப்பியக் குடியேற்றங்களையும் கிறிஸ்துவர்களையும் தாக்கினார்குலூ**

5. ஜெர்மனியின் பேராசை

அ) முதல் உலகப்போரின் ஜெர்மனியின் அரசர் யார்?
**கெய்சர் – இரண்டாம் வில்லியம்**

ஆ) அவரின் நம்பிக்கை என்ன?
**உலகம் முழுவதும் ஆதிக்கம் செலுத்தும் உரிமை மற்றும் திறமை ஜெர்மனிக்கு மட்டுமே உள்ளது என்று நம்பினார்.**

இ) அவரால் சகித்துக் கொள்ள முடியாதது என்ன?
**ஆங்கிலேயர்களின் பேரரசில் சூரியன் மறைவதே இல்லை என்பதை ஏற்றுக்கொள்ள இயலவில்லை.**

ஈ) எங்கு கப்பற்படைத்தளம் அமைந்திருந்தார்?
**ஹெலிகோலாண்ட்**

6. பால்கன் பிரச்சனை

அ) பால்கன் நாடுகளைக் குறிப்பிடுக.
**செர்பியா, பல்கேரியா, அல்பேனியா, கிரீஸ் மற்றும் மாண்டி நீக்ரோ**

ஆ) முதல் பால்கன் போர் எவ்வாறு முடிவுக்கு வந்தது?
**லண்டன் உடன்படிக்கை**

இ) ஏனைய பால்கன் நாடுகள் பல்கேரயா மீது ஏன் போர் தொடுத்தன?
**முதல் பால்கன் போரில் கிடைத்த பகுதிகளை செர்பியா தன்னோடு சேர்த்துக்கொண்டது.**

ஈ) இரண்டாம் பால்கன் போரின் முடிவு என்ன?
**பல்கேரியா தோற்கடிக்கப்பட்டு, பெரும்பகுதிகளை செர்பியா தன்னோடு சேர்த்துக்கொண்டது.**

7. உடனடிக் காரணம்

அ) போஸ்னியா மற்றும் ஹெர்சிகோவினாவை எப்பொழுது ஆஸ்திரியா இணைத்தது?
1908

ஆ) ஆஸ்திரியா நாட்டு பட்டத்து இளவரசர் யார்?
பிரான்சிஸ் பெர்டினான்டு

இ) அவருக்கு நேர்ந்தது என்ன?
செர்பிய இளைஞனால் சுட்டுக் கொல்லப்பட்டார்

ஈ) ஆஸ்திரியா என்ன செய்தது?
கொலை குறித்து செர்பியாவின் விளக்கம் திருப்தி அளிக்காததால் போர் அறிவித்தது.

http://www.trbtnpsc.com/2013/09/10th-study-materials.html

www.Padasalai.Net
www.TrbTnpsc.com

8. போரின் போக்கு

அ) முதல் உலகப்போரின் காலம் என்ன?

**1914 முதல் 1918 வரை**

ஆ) மைய நாடுகள் யாவை?

**ஜெர்மனியும் அதன் கூட்டணி நாடுகளும்**

இ) நேச நாடுகள் யாவை?

**இங்கிலாந்தும் அதன் நட்புறவு நாடுகளும்**

ஈ) போரில் உபயோகப்படுத்தப்பட்ட போர்க் கருவிகள் யாவை?

**பீரங்கிப்படை மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள்**

9. கிழக்கு முனைப் போர்க்களம்

அ) துருக்கி எந்த ஆண்டு போரில் ஈடுபட்டது?

**அக்டோபர் 1914**

ஆ) இது ஏன் ஒரு சாட்டையடியாகக் கருதப்படுகிறது?

**ரஷ்யாவிற்கும் துருக்கிக்கும் இடையே இருந்த தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டது**

இ) பிரிட்டன், கலிபோலி தீபகற்பத்தை பிடிக்க விரும்பியது ஏன்?

**டார்டனல்ஸ் பகுதியை கட்டுப்படுத்தவும், கான்ஸ்டாண்டி நோபிளைக் கைப்பற்றவும்**

ஈ) டார்டனல்ஸ் படையெடுப்பின் விளைவுகள் யாவை?

**ஆங்கிலேய படை தோல்வியடைய, பல்கேரியா மைய நாடுகளுடனும், ருமேனியா நேச நாடுகளுடனும் சேர்ந்தது.**

10. போர் விளைவுகள்

அ) உடன்படிக்கையின் முக்கிய அம்சங்கள் எவ்வாறு எழுதப்பட்டன?

**உட்ரோ வில்சனின் 14 அம்ச கோட்பாட்டின் படி**

ஆ) ஜெர்மனி பிரான்சிடம் இழந்தவை யாவை?

**அல்சேஸ், லொரைன் மற்றும் சார் நிலக்கரி சுரங்கம்**

இ) மன்னராட்சியை முடிவுக்குக் கொண்டு வந்த நாடுகள் யாவை?

**ஜெர்மனி, ரஷ்யா, ஆஸ்திரியா மற்றும் துருக்கி**

ஈ) புதிதாகத் தோன்றிய குடியரசுகள் யாவை?

**செக்கோஸ்லோவாகியா மற்றும் போலந்து**

11. சர்வதேச சங்கம்

அ) சர்வதேச சங்கத்திற்கு முன் தோன்றிய சில சர்வதேச அமைப்புகளின் பெயர்களைஎழுதுக.

**1. சர்வதேச சமுதாயம் 2. உலக அமைதிக் கூட்டமைப்பு**

**3. சுதந்திர நாடுகளின் சர்வதேச சங்கம்**

ஆ) சர்வதேச சங்கத்தின் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?

**சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள ஜெனிவா நகரில்**

இ) உறுப்பு நாடுகள் தங்கள் பிரச்சனைகளுக்கு எவ்வாறு தீர்வு காணவேண்டும்?

**சர்வதேச சங்கத்தின் மூலம் சுமூகமான முறையில்**

ஈ) ஜப்பான் எப்போது மஞ்சூரியாவைக் கைப்பற்றியது?

**1931**

12. பிராங்களின் டி. ரூஸ்வெல்ட்

அ) ஜனாதிபதி தேர்தல் எப்பொழுது நடைபெற்றது?

**1932**

ஆ) பிராங்களின் டி. ரூஸ்வெல்ட் எவ்வாறு அழைக்கப்பட்டார்?

**F.D.R**

இ) அவரது தேர்தல் அறிக்கை யாது?

**அமெரிக்க மக்களுக்கு புதிய பயனுரிமைக்கொள்கையை அர்ப்பணிக்க உறுதியளிக்கிறேன்**

ஈ) அவர் உருவாக்கிய கொள்கையின் பெயர் என்ன?

**புதிய பயனுரிமைக் கொள்கை**

2. நிவாரணப் பணிகளின் விளைவுகள்

அ) மக்களுக்கு யார் மீது நம்பிக்கை ஏற்படச் செய்தது?

**F.D.R அரசின் மீது**

ஆ) எதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தது?

**பொருளாதார மேன்மை, உற்பத்தி பெருக்கம்**

இ) அமெரிக்கர்களின் வாழ்க்கையில் ஒரு அங்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சில கருத்துக்களை எழுதுக.

**முதலாளி-தொழிலாளி கூட்டுப் பேச்சு வார்த்தை, பங்கு பரிவர்த்தனை முறைப்படுத்துதல், வேலை நேரக்கட்டுப்பாடுகள்.**

ஈ) எது உலக நாடுகளில் சீர்திருத்தங்களுக்கு வழிகாட்டியாக அமைந்தது?

**புதிய பயனுரிமை கொள்கை**

13. பாசிசக் கட்சி

அ) பாசிசக் கட்சியைத் தோற்றுவித்தவர் யார்?

**முசோலினி**

ஆ) முசோலினியின் முழக்கம் பற்றி எழுதுக

**1.நம்பு-கீழ்ப்படி-போராடு 2.அதிக படை - அதிக மதிப்பு**

இ) பாசிசத்தின் நோக்கங்கள் என்ன?

**1.நாட்டை உயர்நிலைக்கு கொணர்தல், 2.தனி மனிதனின் உடமைகளை பாதுகாத்தல், 3.ஆற்றல் மிக்க வெளியுறவுக் கொள்கை**

ஈ) பாசிசத்தின் குறிக்கோள் என்ன?

**1.எல்லாம் நாட்டிற்காகவே 2. நாட்டிற்கு எதிராக எதுவுமில்லை**

**3. நாட்டிற்கு வெளியே எதுவுமில்லை**

14. பாசிசத்தின் சாதனைகள்

அ) தொழில் உற்பத்தியில் முசோலினி அறிவித்த மாற்றங்கள் யாவை?

**தொழில் துறையில் ஒழுங்கும், கட்டுப்பாடும்**

ஆ) தொழில் பட்டயம் பற்றி நீ அறிந்தவற்றை எழுதுக

**தொழிலாளர் நலனுக்கு உகந்தது, தொழிலை பெருக்கியது**

இ) வேளாண்மைத் துறையில் முசோலினி எடுத்த நடவடிக்கைகள் யாவை?

**நீர்பாசன வசதியை மேம்படுத்தி, தரிசு நிலங்களை விளைச்சல் நிலங்களாக மாற்றினார்**

ஈ) லேட்டரன் உடன்படிக்கை எப்பொழுது கையெழுத்தானது?

**1929**

15. முசோலினியின் தீவிர வெளியுறவுக் கொள்கை

அ) தேசத்தின் முன் முசோலினியின் முழக்கம் என்ன?

**இத்தாலியை பேரரசாக மாற்ற வேண்டும் அல்லது அழிக்கப்பட வேண்டும்.**

ஆ) முசோலினி எப்பொழுது அல்பேனியாவைக் கைப்பற்றினார்?

**1939**

இ) கூட்டு நாடுகள் குண்டு வீசிய தீவு யாது?

**சிசிலி**

ஈ) முசோலினியின் முடிவு என்ன?

**இத்தாலிய குடிமகனால் கொல்லப்பட்டார்.**

R.MAHARAJAN,M.Sc.,M.Ed.,B.Ed, GHSS, VEEDUR, CELL:9543255318
R.MAHARAJAN,M.Sc.,M.Ed.,B.Ed, GHSS, VEEDUR, CELL:9543255318
www.Padasalai.Net
http://www.trbtnpsc.com/2013/09/10th-study-materials.html

www.Padasalai.Net

16. அடால்.ஃப் ஹிட்லர்

அ) அடால்.ஃப் ஹிட்லர் எங்கு பிறந்தார்?

**ஆஸ்திரியா**

ஆ) அவர் தந்தையின் தொழில் என்ன?

**சுங்க அதிகாரி**

இ) ஹிட்லர் எதனைத் தோற்றுவித்தார்?

**நாசிசக் கட்சி**

ஈ) ஹிட்லர் எழுதிய புத்தகத்தின் பெயர் என்ன?

**மெயின் காம்ப் (எனது போராட்டம்)**

17. ஹிட்லரின் தீவிரக் கொள்கை

அ) ஹிட்லர் எதற்காக நாடுகளைக் கைப்பற்றினார்?

**1.ஜெர்மனியின் வளத்தை பெருக்க**

**2.மக்கள் தொகை பெருக்கத்தை சமாளிக்க**

**3.புதிய குடியேற்றங்களை உருவாக்க**

ஆ) 1925 ஆம் ஆண்டு ஏற்பட்ட லொகார்னோ உடன்படிக்கை எவ்வாறு மீறினார்?

**இராணுவ விலக்கு பெற்ற ரைன்லாந்தை கைப்பற்றினார்**

இ) ஹிட்லர் போலந்திடம் வேண்டியது என்ன?

**ஜெர்மனியையும் கிழக்கு பிரஷ்யாவையும் இணைக்கும் வகையில் போலந்து வழியாக இராணுவசாலை அமைக்கும் உரிமை**

ஈ) ஹிட்லர் போலந்து மீது எப்பொழுது போர் தொடுத்தார்?

**1939**

18. இரண்டாம் உலகப்போர் - காரணங்கள்

அ) இத்தாலி - ஜெர்மனி - ஜப்பான் செய்து கொண்ட உடன்படிக்கை யாது?

**ரோம்-பெர்லின்-டோக்கியோ உடன்படிக்கை**

ஆ) முதல் உலகப் போருக்குப் பின் ஏற்பட்ட சில அரசியல் கொள்கைகளைக் குறிப்பிடுக

**ஜனநாயகம், பொதுவுடைமைக் கொள்கை, பாசிசம், நாசிசம்**

இ) வல்லரசு நாடுகளின் தலைவர்கள் பின்பற்றிய கொள்கைகள் பற்றி எழுதுக

**போலியான அமைதிக் கொள்கை**

ஈ) ஹிட்லர் எதை மீறினார்?

**மியூனிச் உடன்படிக்கை**

19. போர் முடிவு

அ) அமெரிக்க பிரிட்டிஷ் படைகள் எங்கு களமிறங்கின?

**நார்மண்டியில்**

ஆ) இவர்கள் யாருடன் இணைந்து கொண்டனர்?

**பிரான்சு உளவுப்படையுடன்**

இ) ஹிட்லர் என்ன செய்தார்?

**தற்கொலை செய்து கொண்டார்**

ஈ) அமெரிக்கா, ஹிரோஷிமா மற்றும் நாகசாகி மீது எப்பொழுது அணுகுண்டுகளை வீசியது?

**1945 ஆகஸ்டு 6 - ஹிரோஷிமா, ஆகஸ்டு 9 – நாகசாகி**

20. ஐ.நா.சபையின் அங்கங்கள்

அ) ஐ.நா.வின் முக்கிய அங்கங்கள் யாவை?

**1.பொதுச்சபை, 2.பாதுகாப்பு மன்றம், 3.பொருளாதார மற்றும் சமூக மன்றம், 4.தர்மகர்த்தா அவை, 5.பன்னாட்டு நீதிமன்றம், 6.செயலகம்**

ஆ) 1953 ஆம் ஆண்டு பொது அவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?

**திருமதி. விஜயலட்சுமி பண்டிட்**

இ) தர்மகர்த்தா சபையின் பணிகள் யாது?

**ஐ.நா. அவையின் கீழுள்ள சில நாடுகளை கண்காணிப்பது**

www.TrbTnpsc.com

ஈ) ஐ.நா.வின் தலைமைச் செயலாளர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?

**பாதுகாப்பு அவையின் பரிந்துரையின் பேரில் பொதுச்சபை தலைமைச் செயலாளரை தேர்வு செய்கிறது.**

21. ஐ.நா. வின் முக்கிய சாதனைகள்

அ) ஐ.நா. செய்து கொண்ட முக்கிய உடன்படிக்கைகளைக் குறிப்பிடுக.

**1963-அணு சோதனை தடைச் சட்டம் மற்றும் 1996-தொடர் அணு சோதனை தடைச்சட்டம்**

ஆ) சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாட்டு மாநாடு எங்கு நடத்தப்பட்டது?

**1992-ல் ரியோ-டி-ஜெனிரோவில் நடத்தப்பட்டது.**

இ) அனைத்து நாடுகளும் எதனை ஏற்றுக் கொண்டன?

**அறிக்கை 21 என்ற கோட்பாடு**

ஈ) சூயஸ் கால்வாய் பிரச்சனையை ஐ.நா.எவ்வாறு முடிவுக்கு கொண்டு வந்தது?

**அமைதிப்படை மூலம்**

22. ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கங்கள்

அ) ஐரோப்பிய ஒன்றியத்தின் சட்டம் இயற்றும் அமைப்பு எது?

**ஐரோப்பிய பாராளுமன்றம்**

ஆ) ஐரோப்பிய ஆணையத்தின் செயல்பாடுகள் யாவை?

**சட்டம் இயற்றுதல், சமர்பித்தல், நிர்வாக செயல்பாடு**

இ) ஐரோப்பிய நீதிமன்றம் எங்கு அமைந்துள்ளது?

**லக்ஸம்பர்க் நகரில்**

ஈ) அந்நியப் பரிவர்த்தனை முறைகள் யாருடைய முக்கியப் பொறுப்பாகும்?

**ஐரோப்பிய மத்திய வங்கி**

23. ஐரோப்பிய ஒன்றியத்தின் சாதனைகள்

அ) ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒற்றை நாணயத்தின் குறியீடு என்ன?

**€ - யூரோ**

ஆ) ஐரோப்பிய ஒற்றை நாணயம் எதைக் களைகிறது?

**வணிக பரிவர்த்தனை தடைகளை**

இ) ஐரோப்பிய ஒன்றியத்தில் தற்போது எத்தனை உறுப்பு நாடுகள் உள்ளன?

**28**

ஈ) ஐரோப்பிய ஒன்றிய ஆராய்ச்சித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கும் அமைப்பு எது?

**ஐரோப்பிய ஆராய்ச்சி ஆணையம்**

24. 1857 ஆம் ஆண்டு பெரும் புரட்சிக்கான அரசியல் காரணங்கள்

அ) துணைப்படைத்திட்டத்தினை அறிமுகப்படுத்தியவர் யார்?

**வெல்லெஸ்லி பிரபு**

ஆ) டல்ஹௌசி பிரபு அறிமுகப்படுத்திய கொள்கை யாது?

**நாடு இழக்கும் கொள்கை**

இ) இரண்டாம் பகதூர்ஷா மீது ஆங்கிலேயர் மேற்கொண்ட நடவடிக்கை யாது?

**சிறைபிடிக்கப்பட்டு ரங்கூனுக்கு நாடு கடத்தப்பட்டார்.**

ஈ) நானாசாகிப் தனது வெறுப்பை ஆங்கிலேயர் மீது அதிகப்படுத்தியது ஏன்?

**ஓய்வூதியம் நிறுத்தப்பட்டதால்**

25. கான்பூர்

அ) கான்பூரில் நடந்த புரட்சியாளர்களுடன் இணைந்தது யார்?

**நானாசாகிப்**

ஆ) ஆங்கிலேயர்களுக்கு ஏற்பட்ட நிலை என்ன?

**ஆங்கிலேயர்கள் படை கலகக்காரர்களிடம் சரணடைந்தது**

R.MEGANATHAN.MA,B.Ed, GHSS, VEEDUR, CELL:9543255318
R.MEGANATHAN.MA,B.Ed, GHSS, VEEDUR, CELL:9543255318
www.Padasalai.Net
http://www.trbtnpsc.com/2013/09/10th-study-materials.html

www.Padasalai.Net

இ) நானாசாகிப்பை தோற்கடித்தது யார்?
**சர் காலின் காம்ப்பெல்**
ஈ) கான்பூர் எப்பொழுது ஆங்கிலேயர் வசம் வந்தது?
**நவம்பர், 1857ல்**

26. மத்திய இந்தியாவில் பெரும் புரட்சி
அ) மத்திய இந்தியாவில் பெரும் புரட்சியை வழிநடத்திச் சென்றவர் யார்?
**இராணி லட்சுமிபாய், தாந்தியா தோப்**
ஆ) இராணி இலட்சுமிபாய் கைப்பற்றிய நகரம் எது?
**குவாலியர்**
இ) இராணி இலட்சுமிபாயின் முடிவு என்ன?
**1858 ம் ஆண்டு நடந்த போரில் கொல்லப்பட்டார்**
ஈ) தாந்தியா தோப்பிற்கு நிகழ்ந்தது என்ன?
**கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டார்.**

27. பிரம்ம சமாஜம்
அ) பிரம்ம சமாஜத்தினை நிறுவியவர் யார்?
**இராஜாராம் மோகன் ராய்**
ஆ) இராஜாராம் மோகன்ராய் பயின்ற மொழிகள் யாவை?
**அராபிக், ஆங்கிலம், பிரெஞ்சு, கிரேக்கம், ஹீப்ரு, இலத்தீன் மற்றும் பாரசீகம்**
இ) இராஜாராம் மோகன்ராய் எழுதிய புத்தகங்கள் யாவை?
**1) ஏசு கிறிஸ்துவின் கட்டளைகள் 2) அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் வழி**
ஈ) பிரம்ம சமாஜத்தின் நம்பிக்கை யாது?
**ஒரே கடவுள் - பொது சமயம்**

28. ஆரிய சமாஜம்
அ) சுவாமி தயானந்த சரஸ்வதியின் இயற்பெயர் என்ன?
**மூல் சங்கர்**
ஆ) சுவாமி தயானந்த சரஸ்வதியின் குரு யார்?
**சுவாமி விராஜனந்தர்**
இ) சுவாமி தயானந்த சரஸ்வதியின் கொள்கை என்ன?
**வேதத்தை நோக்கி செல்**
ஈ) ஆரிய சமாஜம் எதனை ஆதரித்தது?
**பெண் கல்வி, கலப்பு மணம், சமபந்தி உணவு, தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம்**

29. பிரம்மஞான சபை
அ) பிரம்மஞான சபையை நிறுவியவர் யார்?
**மேடம் பிளாவட்ஸ்கி மற்றும் ஹென்றி எஸ். ஆல்காட்**
ஆ) பிரம்மஞான சபை நிறுவப்பட்டது ஏன்?
**கடவுள் பக்தி மற்றும் உண்மை அறிவை மக்கள் பெற**
இ) 1893 ஆம் ஆண்டு பிரம்மஞான சபையின் தலைவர் யார்?
**அன்னிபெசண்ட் அம்மையார்**
ஈ) பிரம்மஞான சபையின் தலைமையகம் எங்குள்ளது?
**சென்னை அடையாரில் உள்ளது**

30. இராமகிருஷ்ண மடம்
அ) இராமகிருஷ்ண பரமஹம்சர் என்பவர் யார்?
**காளி கோவில் அர்ச்சகர்**
ஆ) இராமகிருஷ்ண மடத்தினை நிறுவியது யார்?
**சுவாமி விவேகானந்தர்**
இ) உலக சமயமாநாடு எங்கு எப்பொழுது நடைபெற்றது?
**1893ல் சிகாகோ நகரில் நடைபெற்றது.**
ஈ) உலக சமயமாநாட்டில் இந்து சமயத்தின் பிரதிநிதியாக கலந்து கொண்டவர் யார்?
**சுவாமி விவேகானந்தர்**

www.TrbTnpsc.com

31. அலிகார் இயக்கம்
அ) முஸ்லீம்களின் முதல் சமய இயக்கத்தின் பெயர் என்ன?
**அலிகார் இயக்கம்**
ஆ) சர் சையது அகமது கான் உறுதியாக நம்பியது என்ன?
**நவீன கல்வி மூலம் முஸ்லீம்களிடையே சீர்திருத்தம்**
இ) சர் சையது அகமது கானின் சாதனை யாது?
**அலிகாரில் முகமதியன் ஆங்கிலோ ஓரியண்டல் கல்லூரி தோற்றுவித்தது**
ஈ) சர் சையது அகமது கான் வெளியிட்ட செய்திதாளின் பெயர் என்ன?
**தாசில்-உத்-அஃலக்**

32. டாக்டர். பி. ஆர். அம்பேத்கார்
அ) தலித்துக்கள் மற்றும் தாழ்த்தப்பட்டோர்களின் மீட்பாளர் யார்?
**டாக்டர்.பி. ஆர். அம்பேத்கார்**
ஆ) இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் யார்?
**டாக்டர்.பி. ஆர். அம்பேத்கார்**
இ) இந்திய அரசாங்கத்தால் இவர் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டார்?
**1990ல் பாரத ரத்னா விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டார்.**
ஈ) பம்பாய்க்கு அருகில் மகத் பேரணியை தலைமை ஏற்று நடத்தியது ஏன்?
**தீண்டத்தகாத மக்களுக்கு மகத் என்ற இடத்தில் உள்ள பொது குளத்தில் குடிநீர் எடுக்கும் உரிமையை பெற்றுக்கொடுக்க.**

33. இந்திய தேசிய காங்கிரஸ்
அ) இந்திய தேசிய காங்கிரஸ் எப்பொழுது தோற்றுவிக்கப்பட்டது?
**1885**
ஆ) இந்திய தேசிய காங்கிரஸ் யாருடைய ஆலோசனையால் தோற்றுவிக்கப்பட்டது?
**ஆலன் ஆக்டேவியன் ஹியூம்**
இ) காங்கிரசின் முதல் மாநாடு எங்கு நடைபெற்றது? இதற்கு தலைமை தாங்கியவர் யார்?
**மும்பையில் W.C. பானர்ஜி தலைமையில்**
ஈ) காங்கிரசின் முதல் மாநாட்டில் கலந்து கொண்ட தலைவர்கள் பெயரைக் குறிப்பிடுக.
**1.தாதாபாய் நௌரோஜி, 2.சுரேந்திரநாத் பானர்ஜி, 3.கோபால கிருஷ்ண கோகலே, 4.பெரோஷா மேத்தா**

34. ஜாலியன் வாலாபாக் படுகொலை
அ) கைது செய்யப்பட்ட முக்கியமான தலைவர்கள் யார்?
**டாக்டர் சத்தியபால் மற்றும் டாக்டர் சாய்ப்புதீன் கிச்லு**
ஆ) மக்கள் எங்கு கூடினார்?
**அமிர்தசரஸில் உள்ள ஜாலியன் வாலாபாக் பூங்காவில்**
இ) அமிர்தசரஸின் ஆங்கில இராணுவ தளபதி யார்?
**ஜெனரல் டயர்**
ஈ) இரவீந்திரநாத் தாகூர் செய்தது என்ன?
**நைட் வுட் பட்டத்தை துறந்தார்**

www.Padasalai.Net
P.MUTHUSWAMY,M.A.,B.Ed.,GHSS,VEEDUR,CELL:9543255318
http://www.trbtnpsc.com/2013/09/10th-study-materials.html